# ஹிந்திக்கு எதிர்ப்பு.

## சென்னையில் ஊர்வலம்.

### "தமிழர் பெருங்கழகம்" நிறுவ ஏற்பாடு.

(ஒரு நிருபர்)

சென்னை, அக். 5.

3-10-37ந் தேதி மாலை 4-மணிக்கு இந்நகர் பவளக்காரத் தெருவிலிருந்து தமிழ்ப் பாது காப்புக் கழகச் சார்பில் ஓர் ஹிந்தி எதிர்ப்பு ஊர்வலம் பல கொடிகளுடன் "தமிழ் மொழி வாழ்க" "ஹிந்தி வேண்டாம்" என்ற கோஷத்துடன் தம்பு செட்டித் தெரு, சினாக் கடைத் தெரு, கோவிந்த நாய்க்கன் தெரு, கொத்தவால் சாவடித் தெரு, தங்கசாலைத் தெரு, வைத்தியநாத முதலி வீதி முதலிய வீதி வழியாகச் சென்று காட்டுப் பிள்ளையார் கோவில் தெருவுக்குச் சென்றது. அங்கு தோழர் வித்துவான் கண்ணப்ப முதலியாரவாகள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. தமிழர் பெருங்கழகம் நிறுவுவதற்கு இருவர்களைத் தேர்ந்தெடுக்கப் பட்டது. தோழர்கள் அண்ணாதுரை, அருள் தங்கையா ஆகியவர்கள் கழகத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசினர். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.